தும்பனே பிரதேச சபை
கண்டி மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வறிக்கை 2019 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் தும்பனேபிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீடு குறைபாடுகள

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 05 நூலகங்களிற்காக கிடைத்த புத்தகங்களின் பெறுமதி ரூபா 233,677 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருதது. | புத்தகங்களின் பெறுமதியை சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | ஜர்னல் குறிப்பொன்றூடாக சரிசெய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | பராதீனம் செய்யப்பட்ட நூலக புத்தகங்களின் பெறுமதி ரூபா 190,275 குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | பராதீனம் செய்யப்பட்ட நூலக புத்தகங்களின் பெறுமதியை சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | ஜர்னல் குறிப்பொன்றூடாக சரிசெய்யப்பட்டுள்ளது. |
| (இ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு பிரகாரம், 02 கட்டிடங்களின் பெறுமதி ரூபா 7,356,291 குறைத்துக் காட்டப்பட்டது. | நிலையான சொத்துக்களின் பெறுமதியைசரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | ஜர்னல் குறிப்பொன்றூடாக சரிசெய்யப்பட்டுள்ளது. |
| (ஈ) | மீளாய்வாண்டில் ரூபா 460,545 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 கட்டிடங்கள் நிலையான சொத்தாக | நிலையான சொத்துக்களின் பெறுமதியை சரியாக | ஜர்னல் குறிப்பொன்றூடாக சரிசெய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | கண்க்கீடு செய்ய வேண்டும். | |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று கிடைக்க வேண்டிய ரூபா 183,911 வட்டி ஏனைய முதலீடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | ஐந்தொகை உருப்படிகள் சரியான படிவத்தின் கீழ் குறிப்பிடப்பட வேண்டும். | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்கு உருப்படிகள் 02 இனது நிதிக் கூற்றுக்கள் பிரகார, மீதிகள் மற்றும் அட்டவணை பிரகார மீதிகளுக்கிடையில்ரூபா 55,090 ஆன வித்தியாசம் நிலவியது. | குறித்த மீதிகளின் வித்திதயாசத்தினைஇணக்கஞ் செய்துசீர் செய்ய வேண்டும். | ஒரு வித்தியாசத்தை ஜர்னல் குறிப்பினூடாக சீர் செய்துள்ளதுடன், அடுத்த வித்தியாசம் தொடர்பாக பரிசீலனை செய்து பார்க்கிறேன். |

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள

#### (அ) பெற வேண்டிய கணக்குகள

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளை விஞ்சிய கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 454,864 ஆனது. | நிலுவை மீதிகளை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | நிலுவை மீதிகளை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள

| | | |
|---|---|---|
| ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 16,603,588 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டும் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் போது,முன்னேற்றத்தை சமர்பிக்கிறேன். |

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பண்டக ஆய்வறிக்கை, நிலையான சொத்து பதிவேடு,உறுதி,ஒப்படைக் கட்டளை மற்றும் இருப்புப் பதிவேடுஎன்பவற்றினை கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததால், | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் | கையிருப்புப் பண்டக ஆய்வினை ஒரு மாதத்தினுள் மேற்கொண்டு |

| | | |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 46,065,918 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். | அறிக்கையிடுவதுடன், நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு உட்படுத்த வேண்டிய சொத்துக்களை உட்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

1.4 இணங்காமை
-------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை
-------------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் 219(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் | சபை அங்கத்தவர் ஒருவருக்கு பிரதேச சபையுடன் நிதி மற்றும் ஒப்பந்த தொடர்புகள் நேரடியாக அல்லது வேறு வகையில் இருக்கக் கூடாத போதும், 2015 ஆண்டில், தவிசாளரும் 02 அங்கத்தவர்களும் ஒப்பந்த ரீதியாக 05 கடையறைகளை சுவீகரித்துக் கொண்டிருந்தனர். | பிரதேச சபை சட்டம் பிரகாரம் செயற்பட வேண்டும். | சபையின் இரு அங்கத்தவர்கள் சபைக்கு சொந்தமான கடையறை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாக ஒப்புக் கொண்டுள்ளனர். முன்னால் தவிசாளர் மற்றும் இன்னும் 03 நபர்கள் 03 ஒப்பந்த கடையறைகளை தமது மகனின், துனைவியின் மற்றும் தாயின் பெயரில் சுவீகரித்துக் கொண்டுள்ளதாக உறுதிப்படுத்த சபையிடம் ஆவன ரீதியான சான்றுகள் காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி கோவை<br>------------------------------ | | | |
| (i) | நி.நி. 59 மற்றும் 61 | மீளாய்வாண்டிற்காக சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பாக கணிப்பாய்வொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்கள் பற்றி வருடாந்த ஆய்வொன்று செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்காக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு ள்ளது. |
| (ii) | நி.நி. 177 மற்றும் 178 | பிர பிரதேச சபையொன்றினால் முறையற்ற விதத்தில் கோரப்பட்ட விலையின் அடிப்படையில் சபைக்கு தேவையான அலுவவக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | சபையினால் முறையான பெறுகைகள் விதியினை பின்பற்ற வேண்டும். | தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானம் பிரகாரம், கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |
| (iii) | நி.நி. 218 | காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவி ல்லை. | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | சொத்துக்களை ஆய்வு செய்து அது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு, முன்னேற்றத்தை சமர்பிக்கிறேன். |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------ | | | |
| (i) | 2015 ஜுலை 14 ஆம் திகதிய 03/2015 இலக்க பொது நிதி சுற்றறிக்கை. | பலவேறு விடயங்களிற்காக வழங்கப்பட்ட 04 முற்பணங்கள் 04 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிமித்த உப கட்டுநிதியை அச் செயற்பாடு முடிவடைந்து 10 தினங்களில் தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில்,முற் பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நி.பி 571 | 2010 முதல் 10 சந்தர்ப்பங்களில் கிடைத்த காலம் கடந்த வைப்புக்களை தீர்த்திருக்கவில்லை. | காலம் கடந்த வைப்புக்களை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | நி.பி 571 பிரகாரம், நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 11,929,746 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 5,666,137ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாகமுன்வைக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பில் போடப்பட்ட வருமானம் | 2018 சேர்க்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம | 2017 பில் போடப்பட்ட வருமானம | 2017 சேர்க்கப்பட்ட வருமானம | 2017 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 4,052,000 | 4,812,161 | 3,643,817 | 2,847,123 | 2,980,000 | 4,253,428 | 3,376,362 | 2,129,228 |
| ii | வாடகை | 4,973,000 | 5,232,842 | 4,691,325 | 704,552 | 5,155,000 | 3,000,268 | 2,882,981 | 924,297 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,695,500 | 2,409,146 | 2,469,146 | - | 2,764,000 | 1,533,043 | 1,533,043 | - |
| iv | ஏனைய வருமானம | 9,909,000 | 12,063,083 | 5,487,167 | 17,944,713 | 10,708,000 | 8,872,630 | 4,900,161 | 11,406,155 |
| | கூட்டுத் தொகை | 21,629,500 | 24,577,232 | 16,291,455 | 21,496,388 | 21,607,000 | 17,659,369 | 12,692,547 | 14,459,680 |

#### 2.2.2 வீத வரி மற்றும் வரிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரி** | | |
| ஆரம்ப நிலுவை வீத விரி கட்டணமான ரூபா 1,160,656 இலிருந்து ஆண்டிறுதியில் ரூபா 642,224 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வீத விரி அறவிடப்பட வேண்டும். | சட்ட நடவடிக்கை எடுத்து, நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) குப்பை வரி

---------------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய மொத்த குப்பை வரி வருமானம் ஆன ரூபா 1,470,470 இலிருந்து ரூபா 865,820 ஆன தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை குப்பை விரி அறவிடப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையை அறவிட்டு அறிக்கையிடுவதாகவும், தவரான பில்லிடலின் மீது ஏற்பட்ட நிலுவையை பதிவலிக்கவும் நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) நீர் கட்டணம்

---------------------

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை நீர் கட்டணமான ரூபா 492,902 இலிருந்து ரூபா 295,160 மற்றும் புதிதாக நீர் இணைப்பு வழங்கப்பட்ட 23 பாவனையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 64,795 இனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை நீர் கட்டணத்தை மற்றும் நீர் இணைப்பு கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும. | செயலிழந்த நீர் உத்தேச திட்டங்களின் நிலுவை நீர் கட்டணத்தை பதிவலிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஈ) முச்சக்கர வண்டிக் கட்டணம்

----------------------------------------------

| | | |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் நிலவிய நிலுவை முச்சக்கர வண்டிக் கட்டணம் ரூபா 1,220,785 இலிருந்து ரூபா 951,585 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை முச்சக்கர வண்டி கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும. | முச்சக்கர வண்டி கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

2.2.3 வுாடகை

--------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹதரலியத்த இலங்கை வங்கியிற்கு அருகில் அமைந்துள்ள 06 கடையறைகளிற்காக பெறப்பட்ட புதிய பெறுமதி மதிப்பீட்டின் மீது கடை வாடகை திருத்தப்படாததனால்,ரூபா 62,700 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கடை வாடகை திருத்தத்தினூடாக சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும. | 2019 ஆண்டின், பெறுமதி மதிப்பீட்டறிக்கையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2003 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை களகெதர மடிகே வியாபாரக் கட்டிடத் தொகுதியின் மேல் மாடியில் 04 ஆம் இலக்க கடையறையிலிருந்து அறிவிடப்பட வேண்டிய ரூபா 145,300 கடையறை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான கடையறைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும. | நிலுவையை அறவிடுவது தொடர்பில் பிரச்சினைக்குரிய நிலைமை காணப்படுகிறது. |

2.2.4 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,525,908மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 15,104,370 ஆனது. | சபைக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுக் கொள்ள அட்டவணை சமர்பிக்கப்பட்டுள்ளதுடன், முத்திரைக் கட்டண அட்டவணையை அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) கைவிடப்பட்ட வேலைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2014 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சுஜாதா மகளிர் வித்தியாலய முன்பக்க வியாபாரக் கட்டிடத் தொகுதி நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 2,076,510 செலவு மேற் கொள்ளப்பட்டு கருத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | கருத் திட்டத்தை நிறைவு செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ii) | 2010 ஆண்டில் ரூபா 350,000 செலவில் ஆரம்பிக்கப்பட்ட நில விரிப்பு சிமேந்து கல் கருத்திட்டம் 2014 ஆண்டு முதல் கைவிடப்பட்டிருந்தது. | கருத்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | உற்பத்தியாகும் கற்களின் எண்ணிக்கை குறைவின் மீது அக் கருத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது. |

(ஆ) வேலைகள் மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து 2014 ஆண்டு பெற்றுக் கொண்ட ரூபா 8,000,000 கடன் தொகையிலிருந்து எதிர்பார்த்த களகெதர சுஜாதா மகளிர் வித்தியாலய முன்பக்க வியாபாரக் கட்டிடத் தொகுதி நிர்மாணத்தல் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணியொன்றை சுவீகரித்தல் ஆகிய விடயங்களை நிறைவேற்றாது மீளாய்வாண்டு இறுதியில் கடன் தொகையிற்காக செலுத்தப்பட்ட ரூபா 567,293 ஆன வட்டி சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டமாக அவதானிக்கப்பட்டது. | கடன் பெறப்பட்ட நோக்கத்திற்காக குறித்த பணத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற்றுக் கொண்ட கடன் தொகையின் ஒரு பகுதி மீண்டும் இவ்வாண்டு, விடுவிக்கப்பட்டதுடன், மீதிக் கடன் தொகையிலிருந்து குறித்த கருத்திட்ட வேலைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ)** கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | சபை அதிகார பிரதேசத்தில் ஒன்று சேறும் குப்பைகளை முகாமையின்றி முறையற்ற விதத்தில் திக்கோயவத்த எனும் இடத்திற்கு அகற்றப்பட்டுக் கொண்டிருந்தது. | சபை முறையான குப்பைகள் முகாமையொன்றிற்கு செல்ல வேண்டும். | 02 வாரங்கள் அளவு அடுக்கி வைக்கப்பட்டு இயற்கை பசளையானவுடன் வீட்டுத் தோட்டங்களிற்கு பயன்படுத்தப்படுகிறது. |
| (ii) | செயல் நடவடிக்கை திட்டப்படி, கொம்போஸ்ட் துண்டாக்கும் இயந்திரமொன்று மற்றும் கொட்டும் இயந்திரமொன்று கொள்வனவு செய்து, விற்பனைக்காக கொம்போஸ்ட் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்ட போதும், அச் செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டப்படி, கொம்போஸ்ட் உற்பத்தி நடைமுறையை ஆரம்பிக்க வேண்டும். | இயந்திரங்களை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. |

(ஈ) சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை உக்களடையாத குப்பைகளிற்கிடையிலுள்ள பொலிதீன், பிளாஸ்டிக் போன்ற பொருட்களிற்காக சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை பின்பற்றாது குப்பை கொட்டிலினுள் எறிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. | சுற்றாடல் பிரச்சினைகள் குறையும் வகையில் குப்பை முகாமை வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். | எதிர் காலத்தில், குப்பைகளை எறிப்பதற்காக தேவையான இயந்திரமொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**(உ)** நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய செயற்பாடுகள் எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில், சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

3.2 முகாமைத்துவவினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2014 ஆண்டின் போது, சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட 02 நீர் கருத்திட்டங்கள் மீளாய்வாண்டு வரையும் செயலற்று இருந்ததுடன், நலன்கள் பெற்றுக் கொண்ட 16 நுகர்வோர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 50,370 தொகையொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ) | சபையின் 06 நீர் உத்தேச திட்ங்களில் நீர் உரிய தரத்தில் இல்லை என நுண்பாக உயிரியல் பரிசோரனையின் மூலம் உறுதியாகி இருந்த போதும், அதற்காக பொருத்தமான வேலைத் திட்டமொன்றை பின்பற்றாது, | சபையின் நீர் உத்தேச திட்ங்களினால் விநியோகிக்கப்படும் நீர் திருப்பதிகரமான தரத்தில் உள்ளது என உறுதிப்படித்திக்கொள்ள | நீர் குடிப்பதற்கு தகாதது எனும் அறிக்கை சபைக்கு கிடைத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | குடிப்பதற்காக நீர் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. | வேண்டும். | |
| (இ) | 2012 ஆண்டின் போது, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குரூபா 500,000 ஆன குத்தகை முற்பணமொன்று செலுத்தி குப்பை அகற்றுவதற்கு டிக்ஒயவத்த காணியை பெற்றுக் கொண்டிருந்த போதும், முறையான குத்தகை உறுதியொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முறையான குத்தகை உறுதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இன்னும் பெற்றுக் கொண்ள்ளப்படவில்லை. |

3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 24 வெற்றிடங்கள்காணப்பட்டன. | வெற்றிடங்ளை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | 10 வெற்றிடங்கள் மாத்திரம் தற்போது நிரப்பப்பட்டுள்ளது. |

3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 06 நீர் உத்தேசத் திட்டங்களில் நீர் சுத்திகரிக்கப்படாமல் 427 பாவனையாளர்களிற்கு விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. | விநியோகிக்கும் நீர் சுத்திகரிப்பு செய்யப்பட வேண்டும். | நீர் சுத்திகரிப்பதற்கு தேவையான உபகரணங்களை பெற்றுக் கொள்ள சபைக்கு நிதி இயலுமை இல்லாதுள்ளது |
| (ஆ) | ஹதரலியத்த வியாபார கட்டிட தொகுதியின் முதலாம் கட்டிடத்தில் கீழ் மாடியில் முன்பக்கத்தில் 02 ஆம் இலக்க கடையறை மனு சமர்ப்பிக்காத சபையின் உறுப்பினர் ஒருவருக்கு முறையற்ற விதத்தில் குத்தகை வழங்கப்பட்டிருந்தது. | கடையறைகளை குத்தகைக்கு வழங்கும் போது, வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.5.1 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹதரலியத்த வியாபார கட்டிட தொகுதியின் முதலாம் கட்டிடத்தில் கீழ் மாடியில் பின்பக்கத்தில் 28 ஆம் இலக்க கடையறையின் முந்திய குத்தகை ஒப்பந்தம் 2016 ஜுன் 14 திகதி இரத்துச் செய்து 02 ஆண்டுகளும் 04 மாதங்கள் கடந்திருந்த போதும் மீள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | கடையறைகளை மீள் குத்தகைக்கு வழங்கி, சபைக்கு பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குத்தகை காரரினால் ஒப்பநதத்தில் குறிப்பிட்டவாறு தெளிவான உரிமையை சபைக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்திக்காததனால்,பொருப்பை சுவீகரிப்பதற்காக உள்ளுராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை செய்யப்பட்டுள்ளது. |

3.5.2 விளைவற்ற/குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 611,719 பெறுமதியான நிலையான சொத்துக்களின் 07 உருப்படிகள் 01 ஆண்டிற்கும் 18 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமொன்று முதல் விளைவற்ற/ குறைபயன்பாட்டுன் நிலவியது. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் விளைவற்ற/ குறைபயன்பாட்டு நிலைக்கு உள்ளாக இடமளிக்கக் கூடாது. | ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2010 ஆண்டில் நில விரிப்பு சீமேந்துக் கல் கருத்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 124,319 பெறுமதியான இயந்திரம் 2014 ஆண்டு முதல் விளைவற்றதாக நிலவியது. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் விளைவற்ற/ குறைபயன்பாட்டு நிலைக்கு உள்ளாக இடமளிக்கக் கூடாது. | ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கிறேன். |

3.6 பெறுகைகள்

3.6.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

3.6.2 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுஜாதா மகளிர் வித்தியாலயத்தின் முன்பக்க வியாபார கட்டிடத்தொகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2014 ஆண்டின் போது, செலுத்தப்பட்ட ரூபா 883,333 ஆன முற்பண தொகை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்திட்டத்தின் முன் நடவடிக்கைகளை மேற்கொள்ள அல்லது ஒப்பந்தத்தை முடிவு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |